بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜும்ஆ பேருரை

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**மொழியாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

April 25 2014



Biatul Futuh, London

## மஹ்மூது அஹ்மது பெங்காலி : ஓர் உண்மையான அஹ்மதி வஃபாத் ஆகி விட்டார்கள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ۔ إِيَّاكَ نَعْبُدُ

وَ إِيَّاكَ نَسْتَعِينُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ۔

இந்த சமயத்தில் நான் மிகவும் நேசத்திற்குரிய ஒரு நபரைப் பற்றி கூற விரும்புகிறேன். நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதில் ஒரு சிறப்பான தகுதி அவர்களுக்கு இருந்தது. அவர்கள் நமது ஜமாஅத்தின் தொண்டராவார்கள். இரண்டு தினங்களுக்கு முன்னதாக அவர்கள் காலமானார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ஒவ்வொரு மனிதனும் ஒருநாள் இந்த உலகை விட்டுப் பிரிய வேண்டியதுள்ளது. ஆனால், எந்த மனிதர்கள் தங்களது வாழ்க்கையை இறைவனது விருப்பத்திற்கேற்ப கழிப்பதற்கு முயற்சி செய்கின்றனரோ, மேலும் உடன்படிக்கை செய்யும்போது அவற்றை பேணுகின்றனரோ, மேலும் உடன்படிக்கை செய்யும்போது அவற்றை பேணுவதற்கு முயற்சி செய்கின்றனரோ அவர்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றனர்! அத்தகையோர் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதுடன் மனிதர்களுக்கும் தொண்டாற்றுவதற்காக எல்லா நேரமும் முயற்சி செய்கின்றனர். முழு உலகமே புகழ்ந்து கூறுகின்ற மக்களைச் சார்ந்தவர்களாக அவர்கள் இருக்கின்றனர். இதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்ப அத்தகைய மக்கள் மீது சுவர்க்கம் வாஜிப் ஆகி விடுகின்றது.

இந்த மார்க்கத் தொண்டர், காலத்தின் கலீஃபாக்களின் சிறந்த உதவியாளர், கிலாஃபத்திற்காக மிகுந்த தன்மான உணர்வுடைய நமது அன்பான சகோதரர் மதிப்பிற்குரிய மஹ்மூது அஹ்மது ஸாஹிது சாஹிப் ஆவார்கள். பாகிஸ்தானிலுள்ள பெரும்பாலார் மஹ்மூது பெங்காளி என்ற பெயரால் இவரை அறிவர். இப்போது அவர்கள் ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் அமீராக இருந்தார்கள். அங்கு, ஏப்ரல் மாதம் 23ம் தேதி புதன்கிழமை அன்று இவர்கள் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவரது வஃபாத்திற்குப் பிறகு முதலாவதாக எனக்கு ஒருவர் கடிதம் எழுதியிருந்தார் அல்லது அவரிடமிருந்து வந்த தூதுச் செய்தியில், 'கிலாஃபத்திற்காக தன்னை அர்ப்பணித்திருந்த அவரைப் போன்று அல்லாஹ் நம்மையும் ஆக்குவானாக' என்று எழுதப்பட்டிருந்தது. அவருக்கு நான் எழுதிய பதிலில் அவர் உயிர்நாடி போன்று செயல்பட்டார் என்று குறிப்பிட்டிருந்தேன். இந்த கட்டளை ஏன் வந்தது? இவ்வாறு ஏன் கட்டளையிடப்பட்டிருக்கின்றது? என்று ஒருபோதும் அவரது உள்ளத்தில் எந்த தயக்கமும் ஏற்பட்டதில்லை. தனது விருப்பத்திற்கு மாற்றமாக கூட ஏதாவது விஷயம் கூறப்பட்டிருந்தால் உடனடியாக அதை அவர்கள் நிறைவேற்றி விடுவார்கள். இவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தது மற்றும் இவர்களது வஃபாத் பற்றிய விபரங்களை தெரிவிக்கின்றேன்.

ஏப்ரல் 22ம் தேதி சிட்னியிலிருந்த மிஷன் ஹவுஸிலிருந்து அஸர் தொழுவதற்காக இவர்கள் பள்ளிவாசலின் பக்கம் சென்றார்கள். ஆனால் சிறிது நடந்து சென்றதுமே உடல்நலம் சரியில்லாமல் போனதால் வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள். வீட்டிற்கு வந்ததுமே கடுமையாக Brain Haemorrhage –ன் தாக்குதல் ஏற்பட்டது. ஏற்கனவே இவர் Sugar மற்றும் Blood Pressure –ன் நோயாளியாக இருந்தார்கள். இவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு Ventilator –ல் இவர்களை வைத்தார்கள். மூளையின் எந்த பகுதியில் Brain Haemorrhage –ன் தாக்கம் ஏற்பட்டுள்ளதோ அதிலிருந்தும் விடுபட்டு மீண்டும் உயிர் வாழ்வது சாத்தியமற்றது என்றே மருத்துவரும் கருதியிருந்தார். எவ்வாறிருப்பினும், நான் அவர்களிடம் 24 மணி நேரம் இதற்காக முயற்சி செய்து பாருங்கள் என்று கூறி இருந்தேன். 24 மணி நேரத்திற்குப் பிறகு அந்த மிஷினைக் கழற்றிய பிறகு இரண்டு நிமிடங்கள் கழிந்ததும் அவர்கள் அல்லாஹ்வின் முன்னிலையில் ஆஜராகி விட்டார்கள்.

இவர்களைப் பற்றிய அறிமுகம் இதுவாகும். மஹ்மூது சாஹிப் அவர்கள் 1948 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18–ம் தேதி வங்காள தேசத்தின் சாந்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த சார் துக்கியா என்ற கிராமத்தில் பிறந்தார்கள். இவர்களது தந்தையாரின் பெயர் மவ்லானா அபுல் கைர் முஹம்மது முஹிப்புல்லா ஆகும். இவரது தாயாரின் பெயர் ஸய்யதுன்னிஸா ஆகும். இவரது தந்தையாரான அபுல் கைர் முஹம்மது முஹிப்புல்லா சாஹிப் அவர்கள் 1943 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆரம்ப நாட்களில் இவரது பெயர் அபுல் கைர் முஹம்மது ஆக இருந்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் அவர்கள், அவர்களுக்கு முஹிப்புல்லா என்ற பெயரையும் அதோடு சேர்த்து விட்டார்கள். இவர்கள் தமது பகுதியில் முதல் அஹ்மதி ஆவார்கள். சிறந்த ஆலிம் ஆவார்கள். இவர்களுக்கு தப்லீக் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது. இவர்கள் மூலமாக தனது தந்தையாரான ஹாஜா அப்துல் மன்னான் சாஹிப் அவர்களையும் அதாவது மஹ்மூது சாஹிபின் பாட்டனார் அவர்களையும் அஹ்மதிய்யத்தின் ஒளியை அவர்கள் பெற்று அதனை ஏற்கும்படி இவர்கள் செய்தார்கள்.

இவர்கள் அந்தக் காலத்தில் உத்திரபிரதேசத்திலுள்ள ஸஹாரன்பூரில் படிப்பதற்காக சென்ற சமயத்தில் அவர்களுக்கு அஹ்மதிய்யத் தொடர்பாக தெரிய வந்தது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாழ்நாளில் நடைபெற்ற விஷயமாகும். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தில்லி வந்திருந்தார்கள். அப்போது மஹ்மூது சாஹிபின் பாட்டனார் அவர்களுக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் எங்கு அவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்களோ அங்குள்ள மக்கள் அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திக்க அனுமதி வழங்கவில்லை. பிறகு இவர் அஹ்மதியானதும் மக்கள் நம்மை இந்த அருளிலிருந்தும் விலக்கி வைக்க முயற்சி செய்தனர். ஆனால், அல்லாஹ் நமக்கு இந்த அருளை வழங்கி விட்டான் என்று கூறி வந்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறியதற்கிணங்க மஹ்மூது அஹ்மது ஸாஹிது சாஹிப் அவர்களின் தந்தையார் அவர்கள் அவர்களை 'வக்ஃபே அவ்லாது' என்ற திட்டத்தின் கீழ் 1954 ஆம் ஆண்டு வக்ஃப் செய்தார்கள்.

மர்ஹூம் மஹ்மூது அஹ்மது ஸாஹிது சாஹிப் தனது ஆரம்பக் கல்வியை தமது நாட்டில் வைத்தே பெற்றார்கள். பிறகு 1962 ஆம் ஆண்டு சிறு பையனாக இருந்த போதே ரப்வாவில் இருந்த ஜாமிஆ அஹ்மத்திய்யாவில் சேர்ந்தார். 1974 ஆம் ஆண்டு இவர்கள் ஸாஹிது டிகிரியைப் பெற்றார்கள். இவர்களது திருமணம் 1970 ஆம் ஆண்டில் வங்காள தேசத்தின் அமீர் சாஹிபான மர்ஹூம் மவ்லவி முஹம்மது சாஹிப் அவர்களின் மகளான ஹாஜரா சாஹிபாவுடன் நடந்தது. இவர்களுக்கு 3 மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். அல்லாஹ்வின் அருளால் எல்லாரும் திருமணமானவர்கள் ஆவர். ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் முன்னணியில் இருக்கின்றனர். தமது வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில் என்னென்ன சம்பவங்கள் நடந்தன என்பதைப் பற்றி மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்கள் தமது மருமகனிடம் சில விஷயங்களை குறிப்பெடுக்கும்படி கூறியிருந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்கள் கல்வி கற்ற சமயத்தில் ஒருமுறை ஜாமிஆவில் வைத்து கால்பந்து விளையாடிய சமயத்தில் இவரது கால் முட்டில் கடுமையான காயம் ஏற்பட்டது. கடுமையாக நோய்வாய்ப் –பட்டார்கள். கிழக்கு வங்காளத்திற்குத் திரும்பிச் சென்று விட்டார்கள். ரப்வாவின் சீதோஷன நிலையும் மிகவும் கடுமையானதாக இருந்தது. எவ்வித வசதிகளும் இருக்கவில்லை. உப்புத் தண்ணீர் தான் கிடைக்கும். நல்ல இனிமையான தண்ணீர் கிடைக்காது. பெரும்பாலும் இவருக்கு வயிற்றுக் கோளாறு இருந்து வந்தது. பெற்றோர்களும் மிகத் தொலைவில் இருந்தனர். சிறியவராக இருந்தார்கள். பெற்றோர்களின் நினைவு அவருக்கு வந்தது. காயமும் ஏற்பட்டிருந்தது. அதனால் அவர்கள் வங்காள தேசத்திற்குத் திரும்பிச் சென்று விட்டார்கள். அந்தக் காலத்தில் அது கிழக்கு பாகிஸ்தானாக இருந்தது. ரப்வாவிற்கு மீண்டும் திரும்பி வருவதற்கு இவர்களுக்கு விருப்பம் இல்லாமல் இருந்தது.

ஆனால் இவர்கள் கூறுகின்றார்கள்: அந்த சமயத்தில் பிரின்ஸிபல் ஆக இருந்த ஸய்யது மீர் தாவூது அஹ்மது சாஹிப் அவர்கள் மீண்டும் மீண்டும் இவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். மீண்டும் இவர் ஜாமிஆவிற்கு வர வேண்டும் என்பதற்காக அவர்கள் முயற்சி செய்தார்கள். இதன் காரணமாக இவர்கள் மீண்டும் திரும்பி வந்தார்கள். இவர்களது தந்தையாரின் துஆக்கள் இவரது வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்று இவர்கள் கூறுகின்றார்கள்.

ரப்வாவில் இருந்த போது இவர்கள் தமது தந்தையாருக்கு ரப்வாவின் சீதோஷன நிலை கடுமையானதாக இருக்கின்றது. தண்ணீர் இல்லை. வெப்பம் இருக்கின்றது. சாப்பிடுவதற்கும் குடிப்பதற்கும் மிகவும் கஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது போன்ற பல விஷயங்களைக் கடிதத்தில் எழுதியிருந்தார். இதற்கு பதில் எழுதும் போது இவரது தந்தையாரான முஹிப்புல்லா சாஹிப் அவர்கள் மக்காவிலும் கூட மிகவும் கஷ்டமான நிலைமைகள் தான் இருந்தது. பிறகு சூரா இப்ராஹீமின் வசனமான **(14:38)** رَبَّنَآ إِنِّيٓ أَسۡكَنتُ مِن ذُرِّيَّتِي بِوَادٍ غَيۡرِ ذِي زَرۡعٍ என்ற வசனத்தையும் குறிப்பிட்டு அவர்களுக்கு போதனை செய்திருந்தார்கள்.

பிறகு எழுதினார்கள்: அல்லாஹ்வின் கலீஃபா எந்த நேரத்தில் மக்களை குடி அமர்த்தியிருக்கின்றாரோ அங்கு உங்களால் இருக்க முடியவில்லையென்றால் தந்தையுடன் உங்களுக்கு இருக்கும் தொடர்பு பொருளற்றதாகும்.

மஹ்மூது சாஹிப் கூறுகின்றார்கள்: அதற்கு பிறகு எனது வாழ்க்கையில் மிகப்பெரும் மாற்றம் ஏற்பட்டது.

***ராவல்பிண்டியிலிருந்து வழக்கறிஞரான மதிப்பிற்குரிய முஜீபுர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:***

அமைதியாக இருக்கும் இயல்பை உடையவராகவும் மிகவும் நேர்த்தியாக பணிகளைச் செய்கின்ற ஜமாஅத்தின் தொண்டராகவும் அவர்கள் இருந்தார்கள். முழு வாழ்நாளிலும் மிகுந்த கலப்பற்ற மனத்தூய்மையுடனும் பற்றுடனும் தமது கடமைகளை அவர்கள் நிறைவேற்றி வந்தார்கள். தொண்டு செய்து கொண்டிருக்கின்ற சமயத்திலேயே அல்லாஹ்வின் சமூகத்தில் ஆஜராகி விட்டார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவராக இவர்களை நியமித்தார்கள். அதற்கு பிறகு இவரது நிர்வாகத் திறமையின் சிறப்பம்சங்களும் தெரிய வந்தது.

*முஜீபுர் ரஹ்மான் சாஹிப் கூறுகின்றார்கள்:*

இவர்களது தந்தையாரான மதிப்பிற்குரிய மவ்லானா முஹிப்புல்லாஹ் சாஹிப் அவர்கள் பெங்காலில் முபல்லிக் ஆக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் தங்களது முதல் குழந்தையை வக்ஃப் செய்தார்கள். மஹ்மூது அஹ்மது அவர்கள் சிறுவனாக இருந்த போது, அவர்களை ரப்வா அனுப்பி வைத்தார்கள். தனக்குத் தெரியாத ஒரு சூழலில் இருந்ததால் ஆரம்பத்தில் அவர்கள் மிகவும் கவலை அடைந்தார்கள். ஆனால் இவரது தந்தையாருக்கு இவரைப் பற்றிய ஒரு துடிப்பு இருந்து வந்தது.

***மஹ்மூது சாஹிபின் மாமா முஜீபுர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் அவர்கள் கூறுகின்றார்கள்:***

மஹ்மூது கவலை அடையும்படி விட்டு விடக் கூடாது என்று அவர்கள் அடிக்கடி எனக்கு எழுதுவார்கள். அவர் படித்து ஜாமிஆவில் இருந்து பட்டம் பெற்று வர வேண்டும் என்று விரும்பினார்கள். இது ஆரம்ப நாட்களில் நடந்த விஷயங்களாகும். ஆனால் பிறகு மஹ்மூது சாஹிப் அவர்கள் மிக விரைவாக உள்ளத்தாலும் உயிராலும் கல்வி கற்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். ரப்வாவில் இருந்த பழைய ரப்வாவாசிகளுக்கு தெரியும். பிறகு இவர்கள் ரப்வாவின் சூழலோடு ஒன்றி விட்டார்கள். மீர் தாவூது அஹ்மது சாஹிப் அவர்கள் இவர்களை கோடை விடுமுறையின் போது முஜீபுர் ரஹ்மான் சாஹிபிடம் ராவல்பிண்டிக்கு அனுப்பி வைப்பார்கள்.

முஜீப் சாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூமின் இயல்பில் எளிமை எந்த அளவு இருந்ததென்றால், அவர்கள் எந்த அளவு நல்லொழுக்கம் உள்ளவராகவும் நல்லியல்புள்ளவராகவும் இருந்தார்கள் என்றால் அண்டை வீடுகளிலிருந்து வந்த ஜமாஅத்தைச் சாராத குழந்தைகளும், பெண்களும் இவர்கள் மீது பேரன்பு வைத்திருந்தனர். அவர்களை எப்போதும் அவர்கள் நினைவு கூர்ந்து வந்தனர். மஹ்மூது சாஹிப் அவர்களுக்கு தமது சகோதரர்களுடன் அன்புமிக்க தொடர்பு இருந்து வந்தது. தமது ஏழை உறவினர்களுக்கு அவர்கள் மறைவாக உதவி செய்து வந்தார்கள். வங்காள தேச ஜமாஅத்தில் அவர்களது அமானத்தில் கொஞ்சம் தொகை வைக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் தமது தாயாருக்கு நிரந்தரமாக அவர்கள் தொண்டு செய்து வந்தார்கள். இவர்களது நெருங்கிய உறவினர்கள் அனைவருமே தங்களுடன் அவர்களுக்கு மிகுந்த அன்பு மிக்க தொடர்பு இருந்து வந்தது என்றே கூறுகின்றனர்.

இவர்கள் எப்போது சதர் ஆனார்களோ அப்போது தமது மருமகனை குறிப்பெடுக்கும்படி கூறிய விஷயங்களில் இவர்கள் கூறுகின்றார்கள்:

1979 ஆம் ஆண்டு குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஆலோசனைக் கூட்டத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யா தலைவருக்கான தேர்தல் நடந்தது. ஓட்டுகளின் அடிப்படையில் இவர்கள் ஐந்தாவது இடத்தில் இருந்தார்கள். தேர்தலுக்குப் பிறகு ஃபஜ்ர் தொழுகை சமயத்தில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், அவர்களிடம், 'அதிகமாக இஸ்திக்ஃபார் செய்யுங்கள்; தரூது ஓதுங்கள்' என்று கூறினார்கள். மேலும் அடுத்த நாளிலோ அல்லது அதே நாளில் மாலையிலோ ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவர்களுக்கு குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவருக்கான ஒப்புதலை வழங்கினார்கள். ஓட்டுகளின் அடிப்படையில் அவர் ஐந்தாவது இடத்தில் இருந்தார்.

***இப்போது ஜமாஅத்தின் முபல்லிக் ஆக அமெரிக்காவில் இருக்கின்ற இன்ஆமுல் ஹக் கவ்ஸர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:***

ஜாமிஆவிலுள்ள நாஸிர் விடுதியில் வைத்து எனக்கு அவர்களுடன் நட்பு ஏற்பட்டது. அவர்கள் விடுதியில் ஸயீமாக இருந்தார்கள். இனாம் சாஹிப் முஃதமித் ஆக இருந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: மஹ்மூது சாஹிப் மெஸ்ஸின் உறுப்பினராக இருந்து பிறகு அதன் தலைவராக ஆனார்கள். ஜாமிஆவில் ரயீஸில் ஜாமிஆவாக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவர்களை சதர் ஆக நியமித்து அதற்கான அறிவிப்பு செய்யப்பட்ட போது நான் அவர்களுக்கு அருகில் நின்று கொண்டிருந்தேன் என்று இனாமுல் ஹக் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் முன்னால் சென்று அவர்களை கட்டித் தழுவ விரும்பினேன். அப்போது அவர்கள் என்னைப் பார்த்து விலகிச் செல்லுங்கள் என்று கூறினார்கள். உருதுவும் பெங்காளியும் கலந்த மொழியில் தனக்கே உரிய பாணியில் எனது பெயர் அறிவிப்பு செய்யப்பட்டு விட்டதா? என்று கேட்டார்கள். அதற்கு நான் 'ஆம்' என்று பதில் கூறினேன். அவர்களுக்கு அதில் உறுதி ஏற்படவில்லை. மகிழ்ச்சிக்குப் பகரமாக அவர்களுக்கு துக்கத்தின் நிலைமை இருந்தது. பிறகு நான் அவரை கட்டித் தழுவினேன் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

***காலித் ஸய்புல்லாஹ் சாஹிப் அவர்கள்*** இவர்களுக்கு பிறகு இப்போது ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் அமீராக இருந்து வருகின்றார்கள். அவர்கள் ***கூறுகின்றார்கள்:***

ஒரு சமயத்தில் மஹ்மூது பெங்காளி சாஹிப் அவர்களே இவரிடம், தான் சதர் ஆக நியமிக்கப்பட்ட விஷயம் தொடர்பாக கூறினார்கள். 1977 ஆம் ஆண்டில் தேசிய குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சதர் தேர்தல் நடந்த போது ஓட்டுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவர்கள் ஐந்தாவது இடத்தில் இருந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அவர்களிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள். ஹுஸூர் அவர்கள், அவர்களை அழைத்து இன்று மாலை வரை நீங்கள் அதிகமாக இஸ்திக்ஃபார் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

அவர்களே கூறுகின்றார்கள்: அப்போது நான் மிகவும் அஞ்சினேன். என்னிடம் என்ன தவறு நேர்ந்து விட்டது என்று பயந்தேன். நான் ஐந்தாவது இடத்தில் இருந்தும்கூட ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் என்னை சதராக நியமித்த போது ஹுஸூர் இந்த வழிமுறை மூலம் எனக்கு பணிவின் பக்கம் கவனமூட்டுகின்றார்கள் என்பது தெரிய வந்தது. எல்லா பொறுப்பாளர்களுக்கும் இதில் படிப்பினை இருக்கின்றது. அவர்கள் பொறுப்பிற்காக தேர்ந்தெடுக்கப்படும் போது அவர்கள் இஸ்திக்ஃபாரும் தரூதும் அதிகமாக ஓத வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலம் எப்போதும் பணிவு நிலைத்திருக்க வேண்டும். மேலும் சரியான முறையில் தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்கிக் கொண்டே செல்ல வேண்டும்.

***மஹ்மூது முஜீப் சாஹிப் இஞ்சினியர் அவர்களும் இதைப் பற்றி இவ்வாறு எழுதுகின்றார்கள்:***

மஹ்மூது சாஹிப் அவர்கள் அர்ப்பணிக்கும் மனப்பாங்குள்ள கிலாஃபத்தின் மீது மிகுந்த பற்றுள்ள அஹ்மதியாக இருந்தார்கள். 1980 அல்லது 1981 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 1960 ஆம் ஆண்டிற்கு முன்பு கடந்து சென்ற எல்லா சதர்களின் பெயர்களையும் எடுத்துக் கூறினார்கள். பிறகு மஹ்மூது பெங்காளி சாஹிப் அவர்களைப் புகழ்ந்து கூறியவாறு கட்டுப்படுவதிலும் துஆக்களை பெற்றுக் கொள்வதிலும் எல்லாரையும் விட இவர் முன்னேறிச் சென்று விட்டார் என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், ஐந்தாவது இடத்தில் இருந்த அவரை சதராக நியமித்து கிலாஃபத் யாரை தேர்வு செய்கிறதோ அவரே சிறந்தவராக இருப்பார் என்ற படிப்பினையை நான் ஜமாஅத்திற்கு வழங்க விரும்பினேன் என்று கூறினார்கள்.

குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பதவிக் காலத்தில் இவர்களிடம் அதிக புத்தகங்கள் எழுத வைத்துள்ளார்கள். 1981 ஆம் ஆண்டு நடந்த சம்பவம் இது. குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமா நடந்தது. அப்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவர்களது தொண்டுகளைப் பாராட்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

எவர் தூய எண்ணத்துடன் கிலாஃபத்தைப் பின்பற்றிச் செல்வாரோ அவருக்கு தான் பரக்கத் கிடைக்கும். ஏனென்றால், எல்லா அருள்களும் இந்த அமைப்புடன் தொடர்புடையதாக இருக்கின்றது. இதை தவிர வேறு எந்த விஷயமும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தகுதியைப் பெற முடியாது.

பிறகு கூறினார்கள்: கடந்த வருடத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சதர் தேர்தல் நடந்த போது ஓட்டுகளின் அடிப்படையில் மஹ்மூது அஹ்மது சாஹிப் ஐந்தாவது இடத்தில் இருந்தார். எந்த முதல் நான்கு நபர்களுக்கு ஓட்டுகள் அதிகமாக கிடைத்ததோ அவர்களது பணிகளில் பரக்கத் அவர்களுக்கு கிடைத்த ஓட்டுகளின் காரணமாக இருக்காது. மாறாக எவர் கலப்பற்ற தூய எண்ணத்துடன் கிலாஃபத்தைப் பின்பற்றிச் செல்வாரோ அவர்தான் பரக்கத்தைப் பெறுவார் என்ற படிப்பினையை நான் ஜமாஅத்திற்கு வழங்க விரும்பினேன். மஹ்மூது அஹ்மது பெங்காளி சாஹிப் ஐந்தாவது இடத்தில் இருந்தார்கள். அவரை நான் சதராக நியமித்தேன். மிகுந்த தூய உள்ளம் கொண்ட மனிதராவார். இவரது மனத்தூய்மையில் அல்லாஹ் முன்னேற்றத்தை வழங்குவானாக! பெரும் பணியை இவர்கள் செய்தார்கள். துஆக்களை பெற்றுக் கொண்டார்கள்.

பிறகு ஹுஸூர் அவர்கள் 1960 ஆம் ஆண்டிலிருந்து அந்த சமயம் வரை இருந்த பல்வேறு மஜ்லிஸ்களின் குத்தாமுல் அஹ்மதிய்யா சதர்களின் காலங்களில் இஜ்திமாக்கள் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்ட மஜ்லிஸ்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையின் புள்ளி விபவரங்களை எடுத்துக் கூறினார்கள். அப்போது ஒரு சமயத்தில் அதில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதையும் அதற்கு பிறகு ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றம் தொடர்பாகவும் எடுத்துக் கூறியவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். ஓட்டுகளை பெறுபவர்களுக்கு வெற்றி கிடைப்பதில்லை என்பதை நான் கூற விரும்புகின்றேன். வெற்றி, காலத்தின் கலீஃபாவின் துஆக்களைப் பெறுவதன் மூலம் கிடைக்கின்றது. கடந்த முறை ஓட்டுகளைப் பெற்று ஐந்தாவது இடத்தில் இருந்த நபர் சதர் ஆக்கப்பட்டார். இதற்கு முந்தைய வருடத்தில் இஜ்திமாவில் 771 மஜ்லிஸ்களின் வருகை இருந்தது. அடுத்த வருடத்தில் அதாவது இவ்வருடம் 818 மஜ்லிஸ்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சதராக மஹ்மூது பெங்காளி சாஹிப் அவர்கள் இருந்த காலகட்டத்தில் அப்போது அவர்கள் தலைமையக குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சதராக இருந்தார்கள். அப்போது முழு உலகிற்கும் ஒரு சதர் இருந்து வந்தார். அவர் தலைமையக சதாராக இருப்பார். மற்ற இடங்களில் உள்ளவர்கள் சதர்களாக இல்லை. மாறாக அவர்கள் காயிதுகளாக இருந்தனர். சர்வதேச சதர் என்ற நிலையில் இவர் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கடைசி சதர் ஆக இருந்தார். இவரது காலகட்டம் முடிந்த பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு மிகுந்த பணிவை வெளிப்படுத்தியவாறு இவர் ஒரு கடிதத்தை அனுப்பினார். அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பதில் அனுப்பினார்கள். அதில் நீங்கள் தேவையில்லாமல் வெட்கத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள். வெட்கப்படுவதற்கு அதில் என்ன இருக்கின்றது? உங்களது காலகட்டம் சிறப்பாக இருந்தது. மாஷா அல்லாஹ். மிகவும் கடினமான நிலைமைகளில் மிகவும் சிறப்பாகவும், நுட்பமாகவும், வீரத்துடனும் நீங்கள் பணியாற்றி இருக்கின்றீர்கள். அல்லாஹ் அருள் செய்வானாக! இதனால் தான் நீங்கள் அன்ஸாருல்லாஹ்விற்கு சென்ற பிறகும் கூட உங்களுக்கு தொண்டு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

இவர்களது பதவிக்காலம் முடிந்த பிறகும் ஒரு வருடம் வரை Extension வழங்கப்பட்டது. இவர்கள் தகுதியற்றவராக இருந்திருந்தால் ஒருபோதும் அவ்வாறு செய்திருக்க முடியாது. அல்லாஹ் வருங்காலத்திலும் உங்களை எப்போதும் இந்த இயக்கத்தின் தன்னலமற்ற ஊழியராக ஆக்கி வைப்பானாக! நீங்கள் சிறந்த முறையில் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பினை பெற்றுக் கொண்டே இருப்பீர்களாக!

பிறகு அன்னார் எழுதினார்கள்: நீங்கள் கைதிகளின் நன்மைக்காகவும் அவர்களது மேம்பாட்டிற்காகவும் பெரும் பணிகளைச் செய்துள்ளீர்கள். இதைப் பற்றிய அறிக்கைகள் முறையாக அனுப்பப்பட்டிருந்தது. இந்த அறிக்கைகள் தொடர்பாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் இவ்வாறு கூறியிருந்தார்கள். கைதிகளின் மேம்பாட்டிற்கான பணிகள் தொடர்பான உங்களது ரிப்போர்ட் கிடைத்தது மாஷா அல்லாஹ். நீங்கள் மிகவும் நுட்பமான ஞானத்துடனும் உழைத்தவாறும் பணி செய்துள்ளீர்கள். அல்லாஹ் இதன் நல்ல விளைவுகளை ஏற்படுத்துவானாக! கைதிகளுக்கு அந்தக் காலத்தில் இவர்கள் பெரும் தொண்டுகளைச் செய்திருந்தார்கள்.

பிறிதோரிடத்தில் ரிப்போர்ட்டைப் பார்த்த பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவ்வாறு எழுதியிருந்தார்கள்: கைதிகளுக்கு தொண்டு செய்தது தொடர்பான உங்களது முயற்சிகளை அறிந்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

1982 –ல் ஜமாஅத்திற்கு எதிராக சட்டம் இயற்றப்பட்ட அந்த ஆரம்ப காலகட்டத்தில் நூற்றுக்கணக்கில் கைதிகள் கலிமா (கூறியதன்) காரணமாக சிறைக்குச் சென்றனர். அப்போது குத்தாமுல் அஹ்மதிய்யாவும் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யா அவர்களும் அதிகமான பணிகளைச் செய்திருந்தனர்.

***ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறுகின்றார்கள்:***

கைதிகளுக்கு தொண்டாற்றுவதில் உங்களது முயற்சிகளை அறிந்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. மிகவும் சிறந்த முறையில் நீங்கள் பணியாற்றுகின்றீர்கள். எனது விருப்பத்திற்கேற்ப முற்றிலும் அதை போன்றே நீங்கள் செயல்படுகின்றீர்கள்.

அவர்களது காலக்கட்டத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யா பல துறைகளிலும் முன்னேறியது. அவர்கள் கைதிகளின் நன்மைக்காகவும் மேம்பாட்டிற்காகவும் அஸீரான் டிரஸ்ட்டை நிறுவினார்கள். அதன் கீழ் அவர்களது தேவைகளை நிறைவு செய்து அவர்களது துக்கத்தை அகற்றுவதற்கு முயற்சி செய்யப்பட்டது. இவ்வாறே ஜமாஅத்தின் நூற்றாண்டு நன்றி தெரிவிக்கும் விழாவின் போது மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தரப்பிலிருந்தும் ஒரு ஆம்புலன்ஸ் இறைவனின் படைப்பினங்களுக்கு தொண்டு செய்வதற்காக வழங்கப்பட்டது. புயூதுல் ஹம்து நிறுவனம் தொடங்கிய சமயத்தில் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பெருமளவில் நன்கொடை வழங்கியது. அதற்கு மதிப்பிற்குரிய மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்களே காரணமாக இருந்தார்கள். பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யாவில் பணிபுரிபவர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டுவதற்காக நிலம் வாங்கப்பட்டது. இதில் அவர்களது தனிப்பட்ட ஆர்வத்தை அன்னார் வெளிப்படுத்தினார்கள். பிறகு திருக்குர்ஆன் மொழியாக்க ஃபண்டில் தலைமையக குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு பெருந்தொகையை நன்கொடையாக வழங்குவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. பாகிஸ்தானுக்கு வெளியே குத்தாமுல் அஹ்மதிய்யாவில் அமைப்பு ரீதியான முன்னேற்றத்திற்காக அவர்கள் பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்தார்கள். இவற்றில் மிக விரிவான சுற்றுப்பயணம் 1987 ஆம் ஆண்டு ஜுன் 11 –ம் தேதியிலிருந்து அக்டோபர் 11 –ம் தேதி வரை அவர்கள் சென்ற பயணமாகும். அதில் அவர்கள் ஐரோப்பா, அமெரிக்கா, மேற்கு ஆப்பிரிக்காவின் 11 நாடுகள், ஹாலந்து, பெல்ஜியம், இங்கிலாந்து, கேம்பியா, ஜெர்மனி, செராலியோன், செனிகல், ஐவரிகோஸ்ட் ஆகிய பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்கள். சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா என்ற நிலையில் இது சதரின் முதல் சுற்றுப் பயணமாகும். 1989 ஆம் ஆண்டில் அவர்கள் இந்தோனேஷியா, மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள். அவர்களது காலத்தில் தான் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் விருந்தினர் இல்லத்தின் மேல்மாடி கட்டப்பட்டது. பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யாவின் மஹ்மூது ஹால் கட்டப்பட்டது. இது ஐவானே மஹ்மூது என்று அழைக்கப்படுகிறது. இதில் தீ விபத்து ஏற்பட்டது. இதை சரி செய்ய எவ்வித பொருள் உதவியும் கோராமல் இதன் மராமத்துப் பணிகளையும் கட்டிடத்தின் சீரமைப்புப் பணிகளையும் அவர்கள் செய்தார்கள். அவர்களது காலகட்டத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு நான்காவது கலீஃபத்துல் மஸீஹிற்கான தேர்தல் நடைபெற்ற சமயத்தில் தொண்டுகள் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. பாகிஸ்தானில் இருந்தும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஹிஜ்ரத் செய்து சென்ற மிக இக்கட்டான நிலைமையிலும் கூட குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு தொண்டுகள் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. டியூட்டி கொடுக்கப்பட்டது. ஹுஸூடன் அவர்களும் சென்றார்கள்.

அவர்களது காலகட்டத்திற்கு அல்லாஹ் பல பெருமைக்குரிய வரலாற்றுச் சிறப்புகளையும் வழங்கியுள்ளான். ஹிஜ்ரி காலண்டரின் அடிப்படையில் 14 மற்றும் 15 ஆகிய இரு நூற்றாண்டுகளிலும், அவ்வாறே ஜமாஅத்தின் முதல் மற்றும் இரண்டாவது ஆகிய இரு நூற்றாண்டுகளிலும் தொண்டாற்றுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்திருக்கின்றது. இவருடைய காலகட்டத்தில் தான் குத்தாமுல் அஹ்மதிய்யா தனது 50வது வருடத்தை நிறைவு செய்து 51வது வருடத்தில் நுழைந்தது.

***குத்தாமுல் அஹ்மதிய்யாவின் வரலாற்றை எழுதுகின்ற சுல்தான் முபஸ்ஸிர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:***

மஹ்மூது சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். நான் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக பொறுப்பேற்று 2 அல்லது 3 நாட்கள் கழிந்த சமயத்தில் நான் மிகவும் அஞ்சினேன். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் பாதங்களுக்கு அருகில் அமர்ந்து அதிகமாக அழுதேன். ஆண் பால், பெண் பால் ஆகியவற்றை இவர்கள்

கருத்தில் கொள்வதில்லை. தங்களுக்கே உரிய தொனியில் இவர்கள் என்னால் இந்தப் பணியைச் செய்ய முடியாது என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹுஸூர் அவர்கள் மிகவும் அன்புடன் காலத்தின் கலீஃபா முடிவெடுத்து விட்டால், துஆ செய்து விட்டு முடிவெடுத்து விட்டால் பிறகு அதனை அவர் மாற்றுவதில்லை. என்னுடைய துஆக்கள் உங்களுடன் இருக்கின்றன. ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் என்னிடம் வாருங்கள் என்று கூறினார்கள்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தலையின் மீது எப்போதும் கலீஃபாக்களின் துஆக்கள் இருப்பதை நான் பார்த்தேன். குத்தாம்களுடன் நேரடியாக தொடர்பு வைத்திருந்தார்கள்.

அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எனக்கு போதனை செய்திருந்தார்கள். அலுவலகத்தில் குறைவான நேரம் மட்டுமே உட்கார வேண்டும். காதிம்களுடன் நேரடியாக தொடர்பு வைக்க வேண்டும்.

மஹ்மூது சாஹிப் பொதுவாக அலுவலகத்தில் அமர்வதற்குப் பதிலாக மாலை நேரத்தில் வெளியே நாற்காலியில் அமர்ந்திருப்பார்கள். அங்கு முறையாக குத்தாமுல் அஹ்மதிய்யாவின் அலுவலகம் உள்ளது. முழு வளாகமும் குத்தாமுல் அஹ்மதிய்யாவுடையதாகும். எனவே காதிம்கள் அங்கு வந்து போய் இருந்தனர். அங்கு அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அய்வானே மஹ்மூதிற்கு வந்து போகின்றவர்களிடம் நேரடியாக அவர்கள் தொடர்பு வைத்திருந்தார்கள். அவர்களிடம் நலம் விசாரிப்பார்கள். எவ்வித செயற்கைத் தன்மையும் இல்லாமல் அவர்களிடம் பழகுவார்கள். இதன் விளைவாக காதிம்களிடம் ஒன்றி விடுகின்ற சூழல் ஏற்பட்டு விடும். அவர்கள் ஒவ்வொருவரது துக்கத்திலும் சமமாக பங்கு கொள்வார்கள்.

***முபஸ்ஸிர் சாஹிப் எழுதுகின்றார்கள்:***

ஒருநாள் நாங்கள் அலுவலகத்தில் உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருந்தோம். மிகவும் நேரமாகி விட்டது. அப்போது மஹ்மூது சாஹிப் அவர்கள் சாப்பிடுவதற்காக ஏதாவது இருந்தால் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். நான் விருந்தினர் இல்லம் சென்றேன். பணியில் இருப்பவர்களுக்காக தாருஸ் ஸியாரத்திலிருந்து வந்த உணவு முடிந்து விட்டது. சில துண்டுகள் மட்டுமே எஞ்சியிருந்தன. நான் வெறும் கையுடன் திரும்பியவாறு எதுவுமே இல்லை என்று கூறினேன். சில துண்டுகள் மட்டுமே உள்ளன என்றேன். இதற்கு அவர்கள் அவை பரக்கத்திற்குரியவை ஆகும். அவற்றை கொண்டு வாருங்கள் என்றார்கள். அந்த துண்டுகளை அவர்கள் சாப்பிட்டார்கள். எந்தவொரு அமைப்பாளருக்கோ அல்லது விருந்தினர் இல்லத்திலிருந்த காதிமுக்கோ இது பற்றி எந்த கட்டளையையும் அவர்கள் இடவில்லை. இது பற்றி எவரிடத்திலும் எனக்கு உணவு ஏன் வைக்கவில்லை என்று எந்த கேள்வியும் கேட்கவில்லை. இரவு நேரம் இந்நிலையிலேயே கழிந்தது. அவர்களுக்கு அப்போதும் Sugar இருந்தது. Sugar நோயாளிக்கு சில நேரங்களில் அதிகமாக பசியும் ஏற்படும். ஆனால் அதனை அவர்கள் வெளிப்படுத்தவில்லை. மேலும் முஃதமித் சாஹிப் மற்றும் ஏணைய பணியாளர்களின் வீடுகளும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் வளாகத்திற்குள் தான் இருந்தது. ஆனால் அவர்களுக்கும் அவர்கள் எந்த சுமையையும் தரவில்லை.

***பிறகு டாக்டர் சாஹிப் எழுதுகின்றார்கள்:***

குத்தாமுல் அஹ்மதிய்யாவின் வரலாற்றை எழுதுவதற்காக அவர்கள் என்னை நியமித்து என்னை மிகவும் ஊக்குவித்தார்கள். இவரது நாவில் வங்காள தொனி இருந்தது. எழுத்துக்களிலும் அது வந்து விடும்.

பொதுவாக தமது கடிதங்களை அவர்கள் என் மூலமாக எழுதுவார்கள். 2010 ஆம் ஆண்டு அவர் இலண்டன் ஆண்டு மாநாட்டிற்கு வருகை தந்த போது சில கடிதங்களையும் ரிப்போர்ட்டுகளையும் என் மூலம் எழுதினார்கள். அப்போது டாக்டர் சாஹிபும் இங்கு வந்திருந்தார்கள்.

அவர்களது நாவில் வங்காள தொனி இருந்து வந்ததால் சொற்களைக் கூறுவது அவர்களுக்கு கஷ்டமாக இருந்தது. அப்போது நான் அதனை நகைச்சுவையாக அவரிடம் எடுத்தும் கூறியுள்ளேன். ஆனால் அவர்கள் நகைச்சுவையை தீயதாக எடுத்துக் கொள்ளவில்லை.

பிறகு எழுதுகின்றார்கள்: எல்லாவற்றையும் விட அவரிடம் நான் கற்றுக் கொண்ட சிறந்த விஷயம், காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுவதும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக தனது எல்லா தகுதிகளையும் முழுமையாக பயன்படுத்துவதுமாகும்.

கலீஃபாக்களின் முஃதமித் ஆக அவர்கள் இருந்தார்கள். ஏதாவது ஒரு விவகாரம் தொடர்பாக காலத்தின் கலீஃபா ஏதாவது கேள்வி கேட்டால் நேரான கூற்றைக் கூறுவார்கள். ஹுஸூர் அவர்கள் தரப்பிலிருந்தும் இவ்விஷயத்தில் ஏன் வெறுப்பு காட்டப்பட்டுள்ளது? என்று நினைத்து அவர்கள் ஒருபோதும் தைரியம் இழந்துவிட

மாட்டார்கள். மாறாக, எப்போதும் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். கலீஃபாக்களிடம் வழிகாட்டல் கிடைப்பதை விரும்பினார்கள். துஆ செய்வார்கள். துஆ செய்யும்படி கூறுவார்கள்.

***ஃபிரோஸ் ஆலம் சாஹிப் எழுதுகின்றார்கள்:***

1982 ஆம் ஆண்டு ஜாமிஆவிற்குச் சென்ற சமயத்தில் இவர்களுடன் எனக்கு ஆழமான தொடர்பு ஏற்பட்டது. அப்போது நான் அனுபவம் இல்லாத ஒரு புதிய அஹ்மதியாக இருந்தேன். அவர்கள் மிகவும் Busy ஆக இருந்த போதிலும் என் மீது தமது அன்பான பார்வையைச் செலுத்தி வந்தார்கள். பெருநாள் மற்றும் பிற சந்தர்ப்பங்களில் என்னை வீட்டிற்கு அழைப்பார்கள். அன்பளிப்புகளை வழங்குவார்கள். நாட்டைத் துறந்து வந்த நிலையில் உள்ள குறைபாடுகளை அகற்றுவதற்கு முயற்சி செய்வார்கள். அப்துல் அவ்வல் சாஹிப் அவர்களும் அவர்களது இதே சிறப்பம்சங்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். எல்லாவற்றையும் விட அவர்களிடமிருந்த மிகச் சிறப்பான விஷயம் அவர்கள் கிலாஃபத்திற்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தார்கள். அதற்காக தன்னை அர்ப்பணித்திருந்தார்கள். அமைதியாக இருக்கும் இயல்பை உடையவர்களாக இருந்தார்கள். மற்றவர்களின் சிறப்பம்சங்களைப் பார்க்கக் கூடியவர்களாகவும் அமல் செய்யக்கூடிய சான்றோராகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். பல சந்தர்ப்பங்களிலும் என்னைப் போன்ற சிறுவர்களை அவர்கள் ஊக்குவித்து வந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் மெட்ரிக் படித்து முடித்து ஜாமிஆவுக்குச் சென்ற சமயத்தில் எனக்கு வயது 16. அங்கு நான் பார்த்தது என்னவென்றால் அவர்கள் தொலைவில் இருந்து கொண்டு தமது நாட்டின் நிலைமைகளை ஆய்வு செய்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். விலை மதிப்புள்ள துஆக்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வந்தார்கள். கடந்த வருடம் நான் வங்காள தேசத்தின் ஆண்டு மாநாட்டின் போது இவர்களை எனது பிரதிநிதியாக அனுப்பி வைத்தேன். அங்கும் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். மீண்டும் மீண்டும் எங்களை ஊக்குவித்து வந்தார்கள் என்று இவர் கூறுகின்றார்.

***காலித் ஸய்புல்லாஹ் சாஹிப் எழுதுகின்றார்கள்:***

அமீர் சாஹிப் இவ்வாறு கூறியிருந்தார்கள். நாங்கள் படிப்பதற்காக ரப்வா வந்த சமயத்தில் என்னுடன் வேறு மாணவர்களும் இருந்தனர். நாங்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களைச் சந்திக்கச் சென்றிருந்தோம். அப்போது ஹுஸூர் அவர்கள் கட்டிலில் படுத்திருந்தார்கள். நாங்கள் அவர்களுக்கு அருகில் தரையில் அமர்ந்திருந்தோம். ஹுஸூர் எங்களுக்கு வக்ஃப் செய்வதன் முக்கியத்துவம் தொடர்பாகவும், தியாகத்தைப் பற்றியும் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார்கள். ஹுஸூர் அவர்கள் தமது ஒரு கையை என் மீது வைத்திருந்தார்கள். எல்லாரையும் விட அதிகமாக நான் தான் ஹுஸூருக்கு அருகில் இருந்தேன். அல்லாஹ்வின் நுட்பமான ஞானம் இதில் இருக்கின்றது. வெளியிலிருந்து வந்த மற்ற எல்லா மாணவர்களாலும் சீதோஷன நிலை மற்றும் உணவு ஆகியவற்றில் இருந்த கடினமான நிலையை சகித்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் தமது வீடுகளுக்கு திரும்பிச் சென்று விட்டனர். நான் ஒருவன் மட்டுமே இறைவனின் அருளால் எனது கல்வியையும் வக்ஃபையும் பூர்த்தி செய்தேன். இது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது கை என்னைத் தொட்டதன் பரக்கத்தாகும்.

***பிறகு காலிது ஸய்புல்லாஹ் சாஹிப் எழுதுகின்றார்கள்:***

மர்ஹூம் அமீர் சாஹிப் அவர்கள் புத்திக்கூர்மையுள்ள மனிதராவார். தொடர்புகளை ஏற்படுத்துவது அவற்றைப் பேணிப் பாதுகாப்பது ஆகிய திறன்களை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அதை ஜமாஅத்தின் பலனுக்காக பயன்படுத்தினார்கள். இதனால் இமிகிரேஷனைப் பயன்படுத்துவது பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்கு எளிதானதாக ஆகிவிட்டது. அவர்கள் ஆஸ்திரேலியாவிற்கு வந்த போது சில நூறு எண்ணிக்கையில் இருந்த ஆஸ்திரேலியா ஜமாஅத் இப்போது ஆயிரக்கணக்கில் ஆகிவிட்டது. இந்த முன்னேற்றத்தின் தொடர் நீடிக்கின்றது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப ஆஸ்திரேலியாவிலுள்ள எல்லா பெரும் நகரங்களிலும் அஹ்மதிகள் குடியமர்த்தப்பட்டனர். இதனால் ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரத்திலும் வலுவான ஜமாஅத் நிறுவப்பட்டு விட்டது. மேலும் விரிவான அகலமான அழகான பள்ளிவாசல்கள், மிஷன் ஹவுஸ்கள் ஆகியவை நிறுவப்பட்டு விட்டன. சிட்னியிலும் மஸ்ஜிது பைத்துல் மஹ்தியை தவிர கிலாஃபத் நூற்றாண்டு ஹால் மற்றும் மிஷன் ஹவுஸும் உள்ளது. இப்போது ஒரு விருந்தினர் இல்லம் கட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறே பிரிஸ்பெனில் பள்ளிவாசல் கட்டப்பட்டது. மெல்போர்னில் பள்ளிவாசல் கட்டப்பட்டது. அடிலெய்டில் ஜமாஅத் சென்டர் இருக்கின்றது. கேம்புரோவில் பள்ளிவாசல் கட்டுவதற்காக நிலம் வாங்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. விரைவில் நிலம் கிடைத்து விடும். ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் இவர்கள் சிறப்பான பங்கு வகித்துள்ளார்கள். மாஷா அல்லாஹ்.

***ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் தேசிய தர்பிய்யத் செயலரான இம்ரான் அஹ்ஸன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:***

அமீர் சாஹிப் அவர்கள் 1991 லிருந்து ஆஸ்திரேலியாவின் மிஷனரி இன்சார்ஜ் ஆகவும், ஜமாஅத்தின் அமீர் ஆகவும் தொண்டாற்றி வருகின்றார்கள். அவர்களது காலகட்டத்தில் மிகப்பெரும் புராஜெக்ட்டுகள் நிறைவை எட்டியது. ஆனால் இப்போது கூட ஜமாஅத் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தான் இருக்கின்றது. 2005 –ல் இவர்கள் அங்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிறகு இரண்டு மூன்று புதிய பள்ளிவாசல்களையும் நூற்றாண்டு ஹாலையும் கட்ட வைத்தார்கள். மெல்போர்னில் உள்ள மஸ்ஜிது பைத்துஸ் ஸலாமில் உள்ள பெரிய ஹாலில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தொழுகையாளிகள் தொழ முடியும். இவ்வாறே மற்ற பள்ளிவாசல்களும் மிகவும் விரிவானவையாகும். இவர்களது காலகட்டத்தில் ஆஸ்திரேலியாவில் உள்ள அரசாங்கத்தில் இரு அரசியல் கட்சிகளுடனும் இமிகிரேஷன் விஷயத்தில் மிக நல்ல தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு வேறு பல வசதிகளையும் இவர்கள் அரசிடமிருந்து பெற்றார்கள்.

தலைமை வழிகாட்டலுக்கேற்ப ஆஸ்திரேலியாவில் இவர்கள் கிளை அமைப்புகளை வடிவமைத்தார்கள். பல்வேறு நாடுகளில் வசிப்பவர்களுக்கு மத்தியில் சகோதரத்துவத்தை நிலைநாட்டுவதில் அவர்களது தர்பிய்யத்திற்கு பெரும் பங்கு இருக்கின்றது. பாகிஸ்தானிகள் மட்டுமின்றி, ஃபிஜியன்களும் அங்கு வந்துள்ளனர். ஆஸ்திரேலியன் மற்றும் ஆப்பிரிக்கர்களும் உள்ளனர். இவர்கள் அனைவர் மத்தியிலும் சகோதரத்துவத்தின் சூழலை இவர்கள் ஏற்படுத்தினார்கள். ஒவ்வொருவரிடமும் பொறுப்புகளை ஒப்படைத்து அவர்களை பொறுப்பாளிகளாக ஆக்கினார்கள். அவர்களிடம் அவர்களது தகுதிக்கு ஏற்ப வேலை வாங்கினார்கள். இதுதான் ஒரு சிறந்த நிர்வாகியின் சிறப்பாகும். இதற்கேற்ப மற்றவர்களும் செயல்பட வேண்டும்.

சில நாட்களுக்கு முன் அங்கு ஆண்டு மாநாடு நடந்தது. அதற்கு அவர்கள் தலைமை தாங்கினார்கள். அதில் அவர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்துதல் தொடர்பாக சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள் ஆரோக்கியத்துடன் இருந்தார்கள். நோயைப் பொறுத்த வரையில் அவர்கள் ஆரோக்கியத்தின் பக்கம் திரும்பிக் கொண்டிருந்தார்கள். போதுமான அளவு நல்ல நிலைமையில் அவர்கள் இருந்தார்கள். பிறகு திடீரென்று Stroke ஏற்பட்டது.

***விக்டோரியா ஜமாஅத்தின் தலைவரான ஜாவிது சாஹிப் அவர்கள் ஒரு விரிவான கடிதத்தில் எழுதுகின்றார்கள்:***

விவகாரங்களைப் புரிந்து கொள்வது சிறு சிறு விஷயங்களிலும் வழிகாட்டுவது அகப்பார்வை நிறைந்த தொலைநோக்குப் பார்வையுள்ள அமீர் சாஹிப் தொடர்பான சம்பவங்களை ஒவ்வொரு நபரது நாவிலும் கூறப்படுவது பொதுவானதாக ஆகி விட்டது. அமீர் சாஹிபிடம் ஒரு பழைய வாகனம் இருந்தது. செயற்குழு மீண்டும் மீண்டும் பிடிவாதமாகக் கேட்டுக் கொண்ட பிறகும், அவ்வாறே நான் வேண்டுகோள் விடுத்த பிறகும் கூட அவர்கள் வேறு வாகனத்தை வாங்கவில்லை. ஆனால் மற்ற முரப்பிகளுக்கு எப்போதும் நல்ல வாகனங்களை வாங்கிக் கொடுத்தார்கள். தன்னைப் பற்றி எந்தக் கவலையும் அவர்களுக்கு இருக்கவில்லை.

***இவ்வாறே இவரது மகள் எழுதுகின்றார்கள்:***

ஆடைகளை நாங்கள் வாங்கி வரும் போது, அவர்களுக்கு அதில் அதிகம் ஆர்வம் இருந்ததில்லை. சுகத்தை தரக்கூடிய ஆடையை அணிய வேண்டும் என்று கூறி வந்தார்கள். அதிகமாக அலங்காரம் தேவையில்லை என்பார்கள். ஜமாஅத் செலவீனங்களில் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வார்கள். நினைவாற்றல் மிகவும் நன்றாக இருந்தது. ஜமாஅத் சகோதரர்களை அவர்களது பெயர் மூலம் நினைவு கூறுவார்கள். அவர்களிடம் இருக்கும் சிறப்பம்சங்களைப் பயன்படுத்தும் திறனை அல்லாஹ் இவர்களுக்கு வழங்கி இருந்தான். செயற்குழுக் கூட்டங்களிலும், ஆலோசனைக் கூட்டங்களிலும் காலத்தின் கலீஃபா கூறியுள்ள விஷயங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டி விஷயங்களைப் புரிய வைப்பார்கள்.

கூறுகின்றார்கள்: ஒரு நபருக்கு இங்கு நடைபெறுகின்ற Cricket Tournment –ல் வர வேண்டியதிருந்தது. புயலின் காரணமாக விமானத்தில் அவர் வருவதற்கு காலதாமதமாகி விட்டது. அல்லது விமானம் ரத்தாகி விட்டது. Tournment –ல் கலந்து கொள்ள முடியாமல் போனாலும் பரவாயில்லை. அசல் நோக்கம் காலத்தின் கலீஃபாவை சந்திப்பதாகும். அது நடந்து விட்டால் உனது Tournment –ல் கலந்து கொள்ளும் நோக்கமும் நிறைவேறி விட்டதாகக் கருதுங்கள் என்று கூறி அந்த நபருக்கு புரிய வைத்தார்கள்.

நான் அங்கு சுற்றுப் பயணத்தில் சென்ற சமயத்தில் அவர்கள் அந்த நாட்களில் மிகவும் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். என்னுடன் அவர்கள் மெல்போர்ன் செல்ல முடியவில்லை. ஆனால் தொலைபேசி மூலம் கொஞ்சம் இடைவெளி விட்டு விட்டு பிறகு பேசியவாறு எல்லா ஏற்பாடுகளையும் ஆய்வு செய்து வந்தார்கள்.

கூறுகின்றார்கள்: அமீர் சாஹிப் தமது உரைகளில் குத்தாம், அன்ஸார், லஜ்னா ஆகியோரின் உரிமைகளைச் செலுத்துவது தொடர்பாக போதித்து வந்தார்கள். இதன் சிறந்த தாக்கத்தை அவர்களது வாழ்நாளிலேயே பார்க்க முடிந்தது. வெளிநாடுகளிலிருந்து வரும் மாணவர்களை சிறப்பாக கவனத்தில் வைத்திருப்பார்கள். ஷஹீதுகளின் குடும்பம் தொடர்பான விஷயங்களுக்கு மற்ற எல்லா விஷயங்களை விடவும் முன்னுரிமை வழங்கி வந்தார்கள். சில நேரம் அவர்களுக்கு புகார் கூற வேண்டியது வந்தது. அதனால் இங்கிருந்து சிலருக்கு தண்டனை வழங்க வேண்டியது வந்தது. தண்டனை வழங்க வேண்டியது வந்தால் அதனால் எனது உள்ளம் உடைந்து விடுகிறது என்று கூறுவார்கள். மன்னிக்கும் விஷயங்களை மிக விரைவாக அவர்கள் செய்து வந்தார்கள். அமீர் சாஹிப் அவர்கள் ஆஸ்திரேலியாவிலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எத்தகைய அடிக்கல்லாகத் திகழ்ந்தார்கள் என்றார்கள். ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் வளர்ச்சி மற்றும் அதன் அமைப்பின் அடித்தளமாக இருந்து அவர்கள் பணிபுரிந்துள்ளார்கள்.

***டாக்டர் ஸய்யது ஹஸன் அஹ்மது அவர்கள் கூறுகின்றார்கள்:***

அன்பின் ஒரு கடல் அவர்களிடம் இருந்ததை நான் கண்டேன். உணர்ந்தேன். ஒவ்வொரு அஹ்மதியும் அவர் சிறுவராக இருந்தாலும் பெரியவராக இருந்தாலும் எவ்வித கூச்சமுமின்றி அவர்களது வீட்டிற்கு சென்று வருவார்கள். சாதாரணமான விஷயங்களை கூட அவர்களிடம் கூறுவார்கள். குறிப்பாக இளைஞர்களிடம் பணிகளை ஒப்படைப்பார்கள். அவர்கள் தலைவர்கள் ஆவதற்கு பயிற்சி அளிப்பதாக அது அமையும். எல்லா சமயங்களிலும் ஜமாஅத் சகோதரர்களின் வேதனையில் அவர்கள் உருகி விடுவார்கள்.

***மெல்போர்னைச் சேர்ந்த உஸாமா அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:***

மவ்லானா மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்கள் ஆஸ்திரேலியாவிலுள்ள அஹ்மதிகளாகிய எங்களுக்கு ஓர் அன்பான தந்தை போன்று இருந்து வந்தார்கள். அவர்கள் ஆஸ்திரேயாவிலுள்ள அனைத்து அஹ்மதிகளிடமும் சமமாகவும் எவ்வித பாகுபாடும் காட்டாமல் அன்புடனும் பரிவுடனும் நேசத்துடனும் நடந்து கொண்டார்கள். ஒவ்வொரு சிறியவரையும் பெரியவரையும் தனது அழகிய நடைமுறை, உயரிய நல்லொழுக்கம் மற்றும் சிறந்த முன்மாதிரி மூலம் அவர்களை தன் பக்கம் ஈர்த்து விட்டார்கள். அவர்கள் எல்லா சந்தர்ப்பத்திலும் சிட்னிக்கு வருகின்ற ஒவ்வொரு விருந்தினரையும் நன்றாக கவனிப்பார். ஆண்டு மாநாடு மற்றும் இஜ்திமா ஆகிய சந்தர்ப்பங்களில் தனது வீட்டிறக வெளியே வந்து விருந்தினர்களை அவர்களே வரவேற்பார்கள். அவர்களைக் கட்டித் தழுவுவார்கள். நாங்கள் எப்போதும் அமீர் சாஹிபின் புன்சிரிப்புள்ள முகத்தைப் பார்த்துள்ளோம். அவர்கள் எங்களுடன் அன்பாக நடந்து கொள்வதன் மூலமாக எங்களது பயணத்தின் களைப்பு அகன்று விடும். சில மக்கள் அவர்களுக்கு சில துன்பங்களையும் தந்தனர். மக்கள் அவர்கள் மீது தப்பெண்ணம் கொண்டிருந்தும் கூட அவர்கள் இருந்த காலம் வரை நேரடியாக அவர்களது எந்த குறையையும் காட்ட முடியவில்லை. ஒன்றிரண்டு கேஸ்களில் அவர்கள் மீது தப்பெண்ணம் இருந்து வந்தது. ஆனால் உண்மையில் புகார் கூறியவர்களிடம் தான் குறை இருந்தது.

***தாஹிரா அத்ஹர் சாஹிபா என்றவொரு பெண் இவ்வாறு கூறுகின்றார்கள்:***

சில நாட்கள் முன்பு தான் ஆஸ்திரேயா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு நடந்து முடிந்தது. பள்ளிவாசலில் தங்கியிருந்த விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்யுமாறு அவர்கள் வலியுறுத்திக் கூறி வந்தார்கள். ஆண்டு மாநாட்டிற்கு வருபவர்களைக் கவனிக்க வேண்டும் என்பார்கள். தொழுகைகளை நிறைவேற்றுவது பற்றி வலியுறுத்திக் கூறினார்கள்.

இங்கு நமது பிரஸ்ஸின் இன்சார்ஜ் ஆன ஆபித் வஹீது சாஹிப் அவர்கள் என்னுடன் சுற்றுப் பயணத்தில் இருந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

கடந்த ஆஸ்திரேலியா சுற்றுப் பயணத்தின் போது மதிப்பிற்குரிய மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்களை அருகிலிருந்து பார்ப்பதற்கும் அவர்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பு கிடைத்தது. முழு சுற்றுப் பயணத்தின் போதும் அவர்கள் உடல்நலமில்லாமல் இருந்தும் கூட சிறு சிறு விஷயங்களைக் கூட அவர்கள் கவனத்தில் வைத்திருந்தார்கள். முழுமையாக அதன் பக்கம் கவனம் செலுத்தி வந்தார்கள். உதாரணமாக, ஒருமுறை எங்களுக்கு இரவு உணவின் போது இரண்டாவது நாளும் ஒரே விதமான காய்கறி வழங்கப்பட்டது. ஆனால் எங்களுக்கு அதைப்

பற்றி எந்த உணர்வும் இருக்கவில்லை. ஆனால் பெங்காளி சாஹிப் அவர்கள் இதனை கவனத்தில் வைத்திருந்தார்கள். அவர்கள் நோயாளியாக இருந்தும் கூட சமையலறையில் சென்று விருந்தோம்பல் செய்பவர்களிடம் அதற்கான காரணத்தைக் கேட்டார்கள். இங்கு வேறு எந்த காய்கறியும் கிடைக்கவில்லையா? ஒரேவிதமான காய்கறிகளையே ஏன் உண்ணக் கொடுக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். இவ்வாறு எல்லா வகையிலும் விருந்தினர்களை அவர்கள் கண்காணித்து வந்தார்கள். இதை தவிர அவர்களது இயல்பில் மிக அதிகமாக பணிவு இருந்தது. தனக்கு அறிவு மற்றும் அனுபவம் இருந்தும் கூட பிரஸ் மற்றும் மீடியா தொடர்பாக என்னிடம் ஆலோசனை கேட்பதில் எந்தக் குறையையும் அவர்கள் உணர்ந்ததில்லை. ஆபித் சாஹிப் கூறுகின்றார்கள்: ஜமாஅத்தின் அமைப்பிற்கு கண்ணியம் வழங்குவார்கள். கிலாஃபத்துடன் அளவு கடந்த அன்பு வைத்திருந்தார்கள்.

***நார்வேயின் அமீர் சாஹிப் ஸர்தஸ் முனீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:***

எந்த நாட்களில் அவர்கள் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருந்தார்களோ அப்போது இந்த எளியவனுக்கு கராச்சியில் மாவட்ட காயிதாக தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. மிகவும் துன்பங்கள் நிறைந்த அந்தக் காலகட்டத்தில் அவர்கள் மிகவும் வெற்றிகரமான சதராக செயல்பட்டு வந்தார்கள். இது 1984 மற்றும் 85 களின் காலகட்டமாகும். மிகவும் மோசமான நிலைமைகள் ஏற்பட்ட போது சிந்து மற்றும் பலுசிஸ்தான் ஆகிய ஜமாஅத்தின் அமைப்புகள் கராச்சி ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சிந்துவில் எங்கு ஷஹாதத் நிகழ்ந்தாலும் மஹ்மூது சாஹிப் அல்லது அவர்களின் பிரதிநிதி கராச்சி ஜமாஅத்தின் பிரதிநிதி அங்கு செல்வதற்கு முன்னதாகவே அங்கு சென்று விடுவார்கள். துன்பமான சமயங்களில் மஹ்மூது சாஹிப் மிகவும் வீரத்துடனும் விவேகத்துடனும் மிகவும் கஷ்டமான விஷயங்களை மிகுதியாக உழைத்து செய்து முடித்துள்ளவர். கிலாஃபத்துடன் பேரன்பு இருந்து வந்தது. அதன் மீது தன்மான உணர்வு கொண்டவர்களாக இருந்தார்கள். பாதுகாப்பில் சிறு கவனமின்மையையும் அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. நாங்கள் இஜ்திமாக்கள் மற்றும் ஆண்டு மாநாடுகளுக்காக ரப்வா செல்லும் போது அவர்கள் மிகவும் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொள்வார்கள்.

***இங்கு முரப்பியாக இருக்கும் மலிக் அக்ரம் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:***

ஜாமிஆவில் மாணவராக இருந்த காலகட்டத்தில் இந்த எளியவன் தலைமையக குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஏற்பாட்டின் கீழ் ராவல்பிண்டி மஜ்லிஸிற்கு சுற்றுப்பயணம் சென்றேன். அப்போது ஒவ்வொரு மஜ்லிஸிலும் அவர்கள் பல்வேறு சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். திருக்குர்ஆன் வசனங்கள், நபிமொழிகள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கட்டளைகள், அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்களின் சொற்கள் ஆகியவற்றை அவர்களின் மேற்கோளுடன் அவர்கள் முழுமையாக மனனம் செய்திருந்தார்கள். ராவல்பிண்டியிலுள்ள ஒரு மூத்த பொறுப்பாளர் ஒரு கூட்டம் நடைபெற்ற பிறகு வாழ்க்கையில் இந்த சிறுவன் சிறப்பான கண்ணியத்தைப் பெறுவான் என்று கூறினார். அப்போது மஹ்மூது சாஹிப் ஜாமிஆவின் மூன்றாவது அல்லது நான்காவது வருடத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அக்ரம் சாஹிப் கூறுகின்றார்கள்: அவர்கள் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருந்த சமயத்தில் அவர்களுடன் சேர்ந்து பணிகளைச் செய்தவாறு ஐந்து வருடம் வரை தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. மிகவும் நுட்பமான பார்வையை உடைய, புத்திக்கூர்மையுள்ள, விவகாரங்களைப் புரிந்து கொள்கின்ற மனிதராக இவர்கள் இருந்தார்கள். எளிமை இவர்களிடம் மிகவும் அதிகமாக இருந்தது. மிகவும் பரிவுடன் நடந்து கொள்கின்ற அன்பு காட்டக் கூடிய பெருந்தகையாக அவர்கள் இருந்தார்கள். தன்னுடன் பணியில் இருப்பவர்களும் உழைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருந்தது. மிகவும் வீரமிக்கவராக அவர்கள் இருந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவில் இருக்கின்றது. ஒருமுறை தீய இயல்புள்ள ஓர் அதிகாரி ரப்வாவில் பணி அமர்த்தப்பட்டார். அவர் சில பொருத்தமற்ற தடைகளை ஏற்படுத்தினார். மஹ்மூது சாஹிப் சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா என்ற நிலையில் அவரது அலுவலகத்திற்கு சென்றார்கள். அவரிடம் எந்த அளவு மிடுக்குடனும் திகிலை ஏற்படுத்தும் விதத்திலும் அவர்கள் பேசினார்கள் என்றால் அந்த அதிகாரி பயந்து அந்த தடைகளை உடனே அகற்றி விட்டார்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: பணி செய்கின்ற போது ஒருபோதும் அவர்கள் தமது அல்லது குடும்பத்தின் தேவைக்காக ஜமாஅத்தின் காரைப் பயன்படுத்தியதை நாங்கள் பார்க்கவில்லை. ரப்வாவில் பொதுவாக அவர்கள் கால்நடையாக நடந்து வந்து அல்லது சைக்கிளல் வந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள்.

***குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமாவில் சொற்பொழிவு நிகழ்த்தியவாறு அவர்கள் கூறினார்கள்:***

சில சமயங்களில் சிலர் அஹ்மதியல்லாத நபர்களை விட அஹ்மதி இளைஞர்கள் சிறந்தவர்கள் என்று கூறி விடுகின்றனர். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ள நோக்கமல்ல என்று அவர்கள் கூறினார்கள். மற்றவர்களுடன் இணைத்துப் பார்த்து உங்களது தரம் என்று தேடி அலைய வேண்டாம். அல்லது அவர்களுடன் போட்டி போடவும் வேண்டாம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒவ்வொரு அஹ்மதியும் தங்களுக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றே கூறியுள்ளார்கள். இந்த விஷயத்தை கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும்.

***வங்காள தேசத்தைச் சார்ந்த ஸாஃபர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:***

வங்காள தேசத்தில் இவர்கள் தங்கியிருந்த காலக்கட்டத்தில் இவர்களுக்கு தொண்டாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. கடந்த வருடம் இவர்கள் அங்கு சென்றிருந்தார்கள். மஹ்மூது சாஹிப் மிகவும் பரிவுடன் நடந்து கொள்ளக்கூடிய எளிமையான இயல்பை உடைய மனிதர் ஆவார்கள். குறித்த நேரத்தில் தொழுவதற்காக பள்ளிவாசலுக்கு வந்து விடுவார்கள். நோய்வாய்ப்பட்டிருந்தும் கூட முறையாக தஹஜ்ஜுது தொழுது வந்தார்கள். விருந்தகத்தில் அவர்கள் தங்கியிருந்த சமயத்தில் என்னைச் சந்திப்பதற்காக யார் வந்தாலும் அவரை தடுக்க வேண்டாம் என்று கூறியிருந்தார்கள். தமது சொந்த செலவில் இவர்களுக்கு விருந்தோம்பல் செய்து வந்தார்கள். ஒவ்வொருவரையும் கருத்தில் கொள்வார்கள். நோயாளிகளை நலம் விசாரிப்பதற்காகச் செல்வார்கள். இப்படிப்பட்ட பல சிறப்பான நற்பண்புகளை அவர்கள் எழுதியுள்ளார்கள். இந்தப் பண்புகள் அவர்களது வாழ்நாளின் முதல் நாளிலிருந்து இறுதி நாள் வரை அவர்களிடம் இருந்தது.

***இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசலின் இமாம் மதிப்பிற்குரிய அதாவுல் முஜீப் ராஷித் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:***

மிகுதியான கலப்பற்ற மனத்தூய்மையுள்ள எளிமையான பகட்டு இல்லாத மனிதராக அவர்கள் இருந்தார்கள். 2004 ஆம் ஆண்டில் எனக்கு ஒரு மாதம் ஆஸ்திரேலியா செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அந்த சமயத்தில் அவர்களது எண்ணற்ற சிறப்புகள் பற்றி எனக்கு தெரிய வந்தது. அவற்றின் பட்டியலில் முதலாவதாக இருப்பது அவர்களுக்கு கிலாஃபத்தின் மீது அன்பு இருந்தது. அதற்கு அவர்கள் கட்டுப்பட்டு நடந்தார்கள் என்பதேயாகும். காலையில் உலாவச் செல்லும் போது பெரும்பாலும் இந்த விஷயம் தொடர்பாகவோ நாங்கள் பேசுவோம். ஜமாஅத்தின் முன்னேற்றம், ஜமாஅத் பணிகளில் ஈடுபடுவது பற்றி பேசுவோம். இப்போது அதிகமான பலவீனங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி அவர்கள் மிகவும் வேதனையுடன் கூறுவார்கள். சுற்றுப் பயணங்களில் செல்லும் போது என்னிடம் ஒவ்வொரு ஜமாஅத் தொடர்பாகவும் அவர்களுக்கு எந்தெந்த விஷயங்கள் தொடர்பாக கவனமூட்ட வேண்டியது அவசியமானது என்பதை கூறுவார்கள்.

***காலிது ஹஸன் சாஹிப் அவர்கள் நமது ரஷ்யன் டெஸ்க்கின் இன்சார்ஜ் ஆவார்கள். அவர்கள் எனக்கு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:***

நீங்கள் கிலாஃபத்தின் உயர் பதவியில் அமர்ந்த பிறகு மஹ்மூது சாஹிப் அவர்களுக்கு உங்கள் மீது இருக்கும் அன்பு மிகவும் அதிகமாகி விட்டது. உங்களைப் பற்றி குறிப்பிடும் போதே பணிவும், மனத்தூய்மையும் வெளிப்படுகின்றது.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: எதையும் மிகைப்படுத்தி அவர் கூறவில்லை. இந்தக் காலத்தில் அவர்களது உயர் தகுதியிலுள்ள தூய உள்ளம் கொண்ட, பணிவுள்ள, இறையச்சமுள்ள, எளிமையான இயல்புள்ள, கிலாஃபத்திற்காக தங்களை அர்ப்பணிக்கின்றவர்கள் மிகவும் குறைவாகத்தான் இருப்பார்கள்.

ஒரு நபர் எனக்கு எழுதியுள்ளார்: அவர் அமீர் சாஹிபிற்கு அருகில் அமர்ந்திருந்தார்கள். அப்போது ஆஸ்திரேலியாவிலிருந்து ஜமாஅத்தைச் சார்ந்த நபர் ஒருவரின் தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த நபர், தான் கூறுவதை அமீர் சாஹிப் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார். நான் கூறுவது சரி என்று கூறியவாறு கடுமையான சொற்களைப் பயன்படுத்தினார். மஹ்மூது சாஹிப் அவர்கள் அந்த நபருக்கு புரிய வைத்தார்கள். அப்போது இன்னும் அதிகமாக அவர் கோப்பட ஆரம்பித்தார். நான் காலத்தின் கலீஃபாவிற்கு அறிக்கை அனுப்புவேன்; இதைச் செய்வேன்; அதைச் செய்வேன் என்றார். அவர் பேசி முடித்த பிறகு மிகுந்த வேதனையுடன் இந்த மக்கள் தாமே தவறுகளைச் செய்கின்றனர். பிறகு காலத்தின் கலீஃபாவின் கவலைக்குக் காரணமானவர்களாக ஆகி விடுகின்றனர் என்று கூறினார்கள். இவ்வாறு பல மக்களும் பேசினர். ஆனால் அவர்கள் இந்த தவறுகளின் காரணமாக காலத்தின் கலீஃபாவிடமிருந்து அவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதைப் பற்றி அவர்கள் பொருட்படுத்துவதேயில்லை. விஷயங்களில் உள்ள உண்மையை எல்லா விவகாரங்களிலும் நீதியுடன் எடுத்துக் கூறி

விடுவார்கள். இளைஞர்களுக்கு புரிய வைப்பார்கள். இது இறைவனின் ஜமாஅத் ஆகும். அவனே இதனை பாதுகாக்கின்றான். உங்களுக்கு தொண்டு செய்ய வாய்ப்பு கிடைக்கிறதென்றால் அந்த சந்தர்ப்பத்தில் இருந்தும் பலன் பெறுங்கள் என்று கூறுவார்கள்.

இவர்களின் ஜமாஅத் தொண்டு நாஸிர் மருத்துவமனையிலிருந்து தமது பணி ஆரம்பமானது. பிறகு மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ரப்வாவின் உள்ளூர் முஃதமித் ஆக 1970 லிருந்து 1979 வரை இவர்கள் இருந்தார்கள். பிறகு 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் போது அவர்களுக்கு தலைமையக குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சதர் என்ற உயர்ந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 1979–80, 1980–87, 1987–89 வரை ஏறக்குறைய 10 வருடங்கள் வரை இவர்கள் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருந்தார்கள். சர்வதேச அளவில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இறுதி சதர் ஆக இவர்கள் இருந்தார்கள். அதற்குப் பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யா தனித்தனி அமைப்புகளாக ஆனது. இஸ்லாஹ்–வ–இர்ஷாத் துறையில் தொண்டு செய்வதற்கான வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. நான்காவது கலீஃபத்துல் மஸீஹின் காலத்தில் தலைமையகத் துறையின் ஆடியோ–வீடியோ துறை நிறுவப்பட்ட போது 1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இதை கண்காணிக்கும் பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டு ஆடியோ–வீடியோ துறையின் வகீல் ஆக தஹ்ரீகே ஜதீதின் கீழ் தொண்டு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதற்குப் பிறகு தஹ்ரீகே ஜதீதில் இந்த துறையே முடிவுக்கு வந்து விட்டது. அந்த சமயத்தில் கெசட்டுகளை ஜமாஅத்தில் எட்ட வைப்பதற்காக இந்த துறை இருந்தது. பிறகு M.T.A இந்தப் பணியைச் செய்து வந்தது. 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் தேதியில் இருந்து தனது இறுதி மூச்சு உள்ள வரை ஆஸ்திரேலியா ஜமாஅத்தின் அமீராக தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

அல்லாஹ் இவர்கள் மீது தனது கருணையைப் பொழிவானாக! இவர்களது தகுதிகளை மேலும் உயர்த்திக் கொண்டே செல்வானாக! நிச்சயமாக தன்னலமின்றி தனது எல்லா தகுதிகளையும் பயன்படுத்தியவாறு ஜமாஅத்திற்குத் தொண்டு செய்கின்ற சான்றோராக இவர்கள் திகழ்ந்தார்கள். தனது ஆரோக்கியத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. எந்தவொரு தடையையும் ஜமாஅத்தின் பணிகளின் முன்னால் அவர்கள் நிற்க விட்டதில்லை. எனது கடந்த ஆஸ்திரேலியா சுற்றுப்பயணத்தின் போது அவர்கள் மிகுந்த துன்பத்தில் இருந்த போதிலும் ஒவ்வொரு பணியையும் அவர்கள் கண்காணித்து வந்தார்கள். நான் விமானத்திலிருந்து வெளியே வந்ததும் இவர்கள் எனக்கு முன்னால் நின்றார்கள். அவர்களது நிலைமையைப் பார்த்து மிகுதியாக கவலை ஏற்பட்டது. இடுப்பில் அவருக்கு கடுமையான வேதனை இருந்தது. அவர்களது முதுகெலும்பு மிகவும் பாதிப்பிற்குள்ளாகி இருந்தது. மருத்துவர்களின் ஆலோசனைக்கேற்ப அத்தகைய நோயாளிகள் ஓய்வில் இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் ஓய்வு எடுக்கவில்லை. இது காலத்தின் கலீஃபாவின் சுற்றுப் பயணமாகும். நான் எவ்வாறு ஓய்வாக அமர முடியும்? என்று அவர்கள் கருதினார்கள். விமான நிலையத்திலிருந்து வெளியே வந்து காரில் ஏறி அமர்ந்ததும் நாயிப் அமீர் சாஹிப் அவர்கள் காரோட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் அதாவது நாஸிர் சாஹிபிடம் நான் மஹ்மூது சாஹிப் அவர்கள் பலவீனமாகவும் முதியவராகவும் தென்படுகின்றார்கள் என்று நான் கூறினேன். அப்போது எனக்கு அவரது துன்பத்தைப் பற்றி கணித்துப் பார்க்க முடியவில்லை. அங்குள்ள மருத்துவரிடம் பேசிய பிறகு தான் இந்த விபரங்கள் எனக்குப் பின்னர் தெரிய வந்தது. எவ்வாறு இந்த நபர் இத்தகைய கடும் துன்பத்தில் கூட தன்னை கஷ்டத்தில் ஆழ்த்திக் கொண்டு நடக்கின்றார் என்பது தெரிய வந்தது. இதுமட்டுமின்றி சுற்றுப் பயணத்துடன் தொடர்புடைய எல்லா விஷயங்களையும் அவர்கள் கண்காணித்துக் கொண்டும் இருந்தார்கள். ஒருநாள் இந்த துன்பத்தால் சுற்றுப் பயணத்தின் போது அவரது இரத்த அழுத்தம் மிகவும் அதிகரித்து விட்டது. அவருக்கு Stroke அல்லது மாரடைப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்ற எண்ணம் உதித்தது. நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. சில மணி நேரம் அங்கு இருந்தார்கள். அதற்குப் பிறகு அவர் வீட்டிற்கு வருவதற்கு மருத்துவமனையில் இருந்தவர்கள் அனுமதி வழங்கினார்கள். இந்த வீரமிக்க ஆண் மகன் வீட்டிற்கு வந்ததுமே மீண்டும் பணிகளைச் செய்ய ஆரம்பித்து விட்டார். ஒரு நகரத்திற்கு என்னுடன் சேர்ந்து சுற்றுப் பயணத்தில் அவரால் வர முடியவில்லை. இதனை மிகுந்த துக்கத்துடன் அவர்கள் கூறி வந்தார்கள். பிறிதொரு இடத்திற்கு மிகவும் கஷ்டமான நிலைமையிலும் கூட நான் போக வேண்டாம் என்று கூறிய பிறகும்கூட என்னுடன் அவர்கள் வந்தார்கள். முழு நிகழ்ச்சியிலும் அவர்கள் என்னுடன் எல்லா நேரமும் இருந்து வந்தார்கள். பெரிய அளவில் அந்த நிகழ்ச்சி இருந்தது. அதனை அவர்கள் கண்காணித்து வந்தார்கள். தன்னைப் பற்றிய கவலையை மறந்து விட்டு எனக்கு எந்தத் துன்பமும் ஏற்பட்டு விடக்கூடாதே என்ற கவலையே அவர்களுக்கு இருந்தது. எல்லா நிகழ்ச்சிகளும் சிறந்த முறையில் நடக்க வேண்டும் என்ற கவலை இருந்தது. என்னைப் பற்றிய கவலை மட்டும் அவர்களுக்கு இருக்கவில்லை. மாறாக எங்கள் பயணக் குழுவில் இருந்த அனைவரைப் பற்றியும் அவர்களுக்கு கவலை இருந்தது. அவர்களையும் கவனித்து வந்தார்கள். மீண்டும் மீண்டும் அவர்களை சரியாக என்னால் கவனிக்க முடியவில்லை என்று கூறிக் கொண்டிருந்தார்கள். பயணக் குழுவில்

உள்ளவர்கள் தொடர்பாக காலத்தின் கலீஃபாவிற்கு எந்த துக்கமும் வந்து விடக்கூடாது என்ற காரணத்தினால் மட்டும் தான் அவர்களுக்கு இந்த கவலை இருந்தது. இன்னும் சொல்வதென்றால் சுற்றுப் பயணத்தின் போது அவர்களது உடல்நலம் மோசமாகி விடக்கூடாது என்ற கவலை எனக்கு இருந்தது. எவ்வாறிருப்பினும், சுற்றுப் பயணத்தின் போதே இவர்களது உடல்நலம் சரியாக ஆரம்பித்தது. மிகவும் சிறந்த முறையில் இருந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் மாநாடு நடந்தது. ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அதில் அவர்கள் முழுமையாக பங்கு பெற்றார்கள். நான் குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் அவருக்குக் கீழ் பணியாற்றியுள்ளேன். மிகவும் தாராள மனதுடன் தனக்கு கீழே உள்ளவர்களிடம் வேலை வாங்கினார்கள். அவர்களுக்கு வேலை செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கினார்கள். பிறகு அதற்கு கண்ணியம் அளித்து வந்தார்கள். இவ்வாறு கிலாஃபத்திற்கு சிறந்த உதவியாளர்களாக இருப்பவர்கள் மிகவும் குறைவாகத்தான் இருக்கின்றனர் என்பதை ஆரம்பத்திலேயே நான் கூறி விட்டேன். இவர் சென்று விட்டதால் ஆஸ்திரேலியா ஜமாஅத்தில் ஒரு வெற்றிடம் உருவாகி இருந்தாலும் இறைவனின் ஜமாஅத்துகளை அவனே பாதுகாக்கின்றான். அவனே இந்த வெற்றிடங்களை நிரப்புகின்றான்.

அல்லாஹ் அருள் செய்வானாக! இவர்களைப் போன்ற உதவியாளர்களை எப்போதும் அல்லாஹ் வழங்கி வருவானாக! அவர்கள் கிலாஃபத்திற்கு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகவும் அதற்காக உயிரைத் தியாகம் செய்பவர்களாகவும் தாங்கள் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும். அல்லாஹ் இவரது மனைவி மற்றும் பிள்ளைகளின் பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக! தங்களது தந்தையார் போன்று ஈமானிலும் நிச்சய உறுதியிலும் வலிமையுள்ளவர்களாக ஆக்குவானாக! மேலும் கிலாஃபத்துடன் வலுவான தொடர்புள்ளவர்களாக அவர்களை ஆக்குவானாக! அல்லாஹ் இவர்களது பிள்ளைகளுக்கும் தங்களது தாய்க்குரிய உரிமைகளைச் செலுத்துபவர்களாக ஆக்கி வைப்பானாக!

இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **25.04.2014**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456